திரு. கா. வேழவேந்தன் : தலைவரவர்களே, இந்த வியாசார்பாடி பகுதியில் மாற்றுப் பாதை அமைக்க நிலத்தைக் கையகப் படுத்துவதில் அதிகக் காலதாமதம் ஏற்படுகிறது. அதை விரைவுபடுத்தி, போக்குவரத்து நெரிசலைத் தவிர்க்க அரசு உரிய நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : 1973–74-ம் ஆண்டில் வேலை நடைபெறுவதற்காகப் பணம் ஒதுக்கப்பட்டிருக்கிறது. இந்த வேலையிலே ஏற்படுகிற காலதாமதம் தவிர்க்கப்படும். வேலை விரைவிலே முடிவடைய உரிய நடவடிக்கை எடுக்கப்படும்.

கரிசல்குளம் கிராம பாசனக் குளம்

* 61 **வினு—திரு. சோ. அழகர்சாமி :** மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) திருநெல்வேலி மாவட்டம் கோவில்பட்டி ஒன்றியத்தைச் சேர்ந்த கரிசல்குளம் கிராமத்தில் தற்போது தூர்ந்து போயுள்ள பாசனக் குளத்தைப் புதுப்பிக்க அரசு திட்டமிட்டுள்ளதா ?

(இ) ஆமெனில், வேலை எப்போது துவக்கப்படும் ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : (அ) & (இ) திட்டம் பரிசீலிக்கப்பட்டு, தற்காலிகமாகக் கைவிடப்பட்டுள்ளது.

திரு. சோ. அழகர்சாமி : இந்த இடத்தில் ஏற்கெனவே ஜமீன் காலத்திலே ஒரு பாசனக் கண்மாய் இருந்தது. பின்னர் அது தூர்ந்துபோய்விட்டது. இப்போது குறைந்த செலவிலேனும் அந்தக் கண்மாயைப் புதுபித்து, அந்தப் பகுதியிலுள்ள மானுவாரி நிலத்தை நஞ்சையாக்கினுல் உற்பத்தி பெருகி, உணவுப் பற்ருக்குறை தீர வழி ஏற்படும். ஆகவே, மீண்டும் இந்தத் திட்டத்தை அரசாங்கம் பரிசீலனை செய்யுமா ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : இந்தத் திட்டத்திஞல் பயனடையும் நிலம் 36 ஏக்கர் என்று கணக்கிடப்பட்டிருக்கிறது. அதற்காகும் செலவு 53,000 ரூபாய் என்றும் கணக்கிடப் பட்டிருக்கிறது. செய்கின்ற செலவுக்கு ஏற்ற வகையில் வருவாய் கிடைக்குமா என்று பார்த்ததில், ஒரு டன் உற்பத்திக்கு

2,944 ரூபாய் செலவாகும் என்று தெரிகிறது. ஆகவே, பொருளாதார அடிப்படையில் இத்திட்டம் பயனுடையது அல்ல என்று கருதி, கைவிடப்பட்டது. நமது பொருளாதார நிலைமை சீர்படும்போது மீண்டும் பரிசீலனை செய்யலாம்.

Rationalisation of levy of Sales Tax

* 62 *Q.*—THIRU N. DENNIS :
THIRU N. K. PALANISWAMY : Will the Hon. the Minister for Revenue be pleased to state—

(*a*) whether the rationalisation of Sales Tax structure has been undertaken in this State ; and

(*b*) if so, the details thereof ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : தலைவரவர்களே,

(அ) ஆம்.

(இ) வணிக வரிகள் சட்டங்களையும் விதிகளையும் எளிதாக்கிச் சீரமைப்பதற்கான சாத்தியக் கூறுகள் பற்றி ஆய்வு செய்ய சிறப்புப் பணி அதிகாரி ஒருவரை அரசு நியமித்துள்ளது. விற்பனை வரி மேல்முறையீட்டு நடுவர் மன்றம் அதன் ஆளுகைக்குட்பட்ட மேல்முறையீட்டு நீதி மன்றங்கள் உட்பட, வணிக வரித் துறையின் நிர்வாக அமைப்பு குறித்து ஆய்வு செய்யுமாறும் அந்த அதிகாரி கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளார்.

திரு. என். டென்னிஸ் : தலைவரவர்களே, அந்தக் கமிட்டி எப்போது அறிக்கை சமர்ப்பிக்கும் ? அந்த அறிக்கை சபையில் வைக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : இந்த ஆண்டு ஒருமுனை விற்பனை வரி விதிப்பதுபற்றி ஆலோசித்திருக்கிறதா ? அறிக்கை வந்த பின்னால் மேற்கொண்டு முடிவு செய்யப்படும்.

திரு. கே. எ. வகாப் : தலைவரவர்களே, இந்தக் குழுவானது ஒருமுனை விற்பனை வரி விதிப்பதுபற்றி ஆலோசித்திருக்கிறதா ? இல்லை என்றால் அந்தவிதத்திலே அறிக்கை வேண்டுமென்று அரசாங்கம் கேட்டிருக்கிறதா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : அதுபற்றியும் ஆலோசிக்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.